**உரித்துக் காப்புறுதி நிதியம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

உரித்துக் காப்புறுதி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்தின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும்

திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மற்றும் வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 01 ஆம் இலக்க உடமையுரிமைகளைப் பதிவுசெய்தல் (காப்புறுதி நிதியம்) கட்டளை | | | | |
| | (i) | இலக்கம் 42 (ஆ) | உடமை உரிமை பதிவாளர்களால் 02 வாரங்களுக்கு ஒரு தடவை உடைமையுரிமை வருமானங்கள் சம்பந்தமான அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறு வழங்கப்படாத அறிக்கைகளின் எண்ணிக்கை 141 ஆகும். | சில அலுவலகங்களினால் உரிய அறிக்கைகள் வழங்கப்படாததனால் இந்நிலைமை அறிக்கையிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | வருமானங்கள் சரியாக அறிக்கையிடப்படுதல் வேண்டும். |
| | (ii) | இலக்கம் 42 (உ) | ஒவ்வொரு 14 நாட்கள் முடிவின் போதும் உடைமையுரிமை பதிவாளர்களால் சோகரிக்கப்படுகின்ற பணம் உடையையுரிமை தொடர்பான பதிவாளர் நாயகத்தினால் பிரதான காசேட்டிற்கு தனித்தனியாக வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அனைத்து உடைமையுரிமை பதிவாளர் அலுவலகங்களின் நாளாந்த வருமானங்களின் மொத்த தொகை ஒவ்வொரு நாளும் காசேட்டிற்கு வரவுவைக்கப்பட்டிருந் தது. | வங்கி அறிக்கைக்கு இணங்க ஒவ்வொரு அலுவலகமக உள்ளடக்குவதானது நடைமுறையில் சிக்கலாக உள்ளது என தெரிவிக்கப்பட்டது.. | வருமானம் சரியாக அறிக்கையிடப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | இலக்கம் 42 (ஏ)(4) | ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் உடைமையுரிமை பதிவாளர் நாயகத்தின் காசேட்டில் அல்லது வங்கிக் கணக்கில் எந்த மீதியும் இல்லாதிருக்க வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டின் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் முறையே ரூபா 605,070 மற்றும் ரூபா 92,198 வீதம் காசேட்டின் இறுதி மீதிகள் காணப்பட்டன . | 2022 பெப்ரவரி மாதம் ரூபா 605,070 தொகை பிழையாக கணக்கிற்கு செலவு வைத்தல் மற்றும் மார்ச் மாத வருமானம் ரூபா 92,198 ஆல் குறைத்து கணிப்படு செய்யப்பட்டதன் காரணமாக உருவாகியது என தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட கட்டளைக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 சனவரி 28 ஆந் ததிகதிய DMA/2019/(I)(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | ஒரு காலாண்டிற்கு ஆகக் குறைந்தது ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டமேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிந்தது. | குழுவின் தலைவர் அடிக்கடி மாற்றமடைந்ததனால் முறைப்படியாக குழுக் கூட்டத்தினை நடாத்துவதற்கு முடியாதிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட கட்டளைக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 25,466,814 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 21,449,550 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,017,264 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வள்ர்ச்சிக்கு உடைமையுரிமைகளைப் பதிவுசெய்தல் வருமானம் ரூபா 1,459,190 ஆல் அதிகரித்தல் மற்றும் திறைசேரி முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 2,345,445 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2009 இன் 01 ஆம் இலக்க உடைமையுரிமைகளைப் பதிவுசெய்யும் (காப்புறுதி நிதியம்) கட்டளை இலக்கம் 42(ஆ) மற்றும்(இ) இன் பிரகாரம் 11 உடைமையுரிமை அலுவலகங்களால் அனுப்பப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரீட்சிப்பிற்கு இணங்க 06 உடைமையுரிமை அலுவலகங்களால் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிய உடைமையுமை வருமானம் தொடர்பான அறிக்கை 2009 இன் 01 ஆம் இலக்க உடைமையுரிமைகளைப் பதிவுசெய்யும் (காப்புறுதி நிதியம்) கட்டளை இலக்கம் 42(ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் “ஆர்.ஜீரீ/ஐ.எப்.03” படிவத்திற்கு இணங்கியிருக்காதிருந்தும் | உரிய பதிவேட்டினைப் பேணுவதற்காக 15 நாட்களுக்கு ஒரு தடவை அறிக்கையினை வழங்குமாறு வேண்டப்பட்டிருந்தும் நிர்ணயிக்கப்பட்டவாறு அனைத்து அறிக்கைகளையும் பெற்றுக்கொள்வது சிக்கலானதாக உள்ளது என தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட கட்டளைக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவத்தினால் சரியான படிவத்துடனான அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மேற்கூறிய கட்டளை இலக்கம் 42 (ஆ) இன் பிரகாரம் தலைமை அலுவலகத்திற்கு உடைமையுரிமை பதிவாளர் அலுவலகத்திலிருந்து கிடைக்கின்ற அறிக்கையை உள்ளடக்குவதற்கு படிவம் இலக்கம் “ஆர்.ஜீ.ரீ/ஐ.எப்.02” இற்கு இணங்க ஒரு பதிவேட்டினை பராமரிக்க வேண்டியிருந்த போதிலும் அப்பதிவேட்டினையும் உரிய படிவத்தின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதிரிப் படிவம் “ஆர்.ஜீ.ர்/ஐ.எப்.02” இன் மூலம் உடைமையுரிமை பதிவாளரினால் சேகரிக்கப்பட்ட பணம் தொடர்பான ஒரு அறிக்கையாவதுடன் உடைமையுரிமை பதிவாளர் அலுவலகங்களில் அனைத்து வருமானங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் உதவியுடன் தலைமை அலுவலகத்தினால் ஒரு அறிக்கை தயாரிக்கப்படுவதுடன் அனைத்து அறிக்கைகளும் கிடைக்காததனால் உரிய அறிக்கையை சரியாக நாளதுவரையாக்க முடியாதிருந்தது என தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட படிவத்திற்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (இ) | நிதியத்தின் நடைமுறைக் கணக்கிற்குச் செய்யப்பட்ட நேரடி செலவு வைத்தல்கள் உடைமையுரிமை அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஒப்பீடு செய்து ஆண்டிற்கான உடைமையுரிமை வருமானங்களை இனங்கண்டுகொள்வதற்கான ஒரு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாளாந்த வருமானங்களை ஒவ்வொரு அலுவலகங்களின் உடைமையுரிமை பதிவாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதுடன் உரிய அலுவலகத்தை இனங்காண்பதற்கான ஒரு வேலைத்திட்டம் இல்லாதுள்ளமை இதற்கு காரணமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டது. | சரியான வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருத்தல் மற்றும் வருமானத்தை செலவுவைத்த அலுவலகங்களை இனங்காண்பதற்காக முறையான ஒரு வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 1998 இன் 21 ஆம் இலக்க உடைமையுரிமையை பதிவுசெய்யும் அதிகாரச் சட்டத்தின் கீழ் | அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்காக அடிக்கடி கலந்துரையாடல் | நிதியத்தின் தொடக்க குறிக்கோளினை அடைந்துகொள்வதற்க |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளின் உரிமையை பதிவு செய்யும் போது உரிமை சம்பந்தமான பிழையான தீர்மானங்கள் எடுத்துக்கொண்டதன் காரணமாக தரப்பினர்களுக்கு ஏற்படுகின்ற நட்டத்திற்காக அரசாங்கத்தினால் இழப்பீட்டினை வழங்குதல் நிதியத்தை தோற்றுவிக்கும் பிரதான குறிக்கோளாக இருந்த போதிலும் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை எந்த இழப்பீட்டுப் பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உடைமையுரிமை காப்புறுதி நிதியம் சம்பந்தமாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்துதலும் மேற்கொள்ளப்பட்டது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. | நடாத்தப்பட்டுள்ளதனால் எதிர்காலத்தில் அது தொடர்பாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. | ாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க 12 முகாமைத்துவ சபைக் கூட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டின் போது 04 முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | மேற்கொள்ள வேண்டி இருந்த வேலைகளின் அளவிற்கு இணங்க முகாமைத்துவ சபைக் கூட்டங்களை நடாத்துதல் சபையினால் தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டிற்கு இணங்க மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் முறையே ரூபா 23,000,000 மற்றும் ரூபா 1,555,500 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 27,000,000 மற்றும் ரூபா 1,216,600 ஆக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமும் செலவுகளும் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட திருத்திய பாதீட்டின் பிரதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டமும் பாதீடும் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | அங்கிகரிக்கப்பட்ட பாதீடு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |